திரு. ஆர். உமாநாத் : பேரவைத் தலைவரவர்களே, சட்டி சுட்டது கைவிட்டது என்பதைப்போல, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதிலிருந்து நீங்களே வையுங்கள் என்று அவர்கள் சொல்வது மாதிரி சொன்னார்கள். சிறு தொழில்களை அதிகப்படுத்துவது ஊக்குவிப்பது என்பது மாநில அரசின் கொள்கையாக இருக்கும்பொழுது இலாப நஷ்டத்தைப் பார்த்துச் செய்வது அல்ல, வேலைவாய்ப்பு என்ற அடிப்படையில் அந்தக் கொள்கைக்கு உட்பட்டு, அவர்களாக ஆஃபர் செய்யும்பொழுது, சிமின்ட் ப்ரடொக்ஷன் நன்றாக ஆகும்பொழுது நாம் ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன், இது 20 டன் கெப்பாசிட்டி தான் என்று. மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னார்கள். வேலை வாய்ப்பைக் கருத்திலே கொண்டாவது, நஷ்டம் வந்தாலும் நடத்தலாமே என்று கூறினார்கள். இப்படி வேலைவாய்ப்பைக் கருத்திலே கொண்டு நஷ்டம் வந்து கார்ப்பரேஷன் நடத்தினால், பாருங்கள். கார்ப்பரேஷன், உங்கள் அரசாங்கத்தினாலே திறமைக் குறைவால் செராமிக் இன்டஸ்ட்ரி நஷ்டத்திலே ஓடுகிறது என்று சொல்வார்கள். அதிலே பத்தாயிரம் பேர் பணியாற்றுகிறார்கள் என்று சொன்னால் அப்பொழுது, அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை, நஷ்டத்திலே நடத்தப்படுகிறது என்பது போன்ற குற்றச்சாட்டுகள் சொல்லப்படுகின்றன. சாதாரணமாக மினி சிமின்ட் பிளான்ட் என்றால் 200 டன் கெப்பாசிட்டியாவது இருந்தால் தான் ஓரளவுக்கு வெற்றிகரமாக, இலாபகரமாக நடத்த முடியும். 20 டன் கெப்பாசிட்டியை வைத்துக்கொண்டு இலாபகரமாக நடத்துவது என்பது இப்பொழுது பரிசீலனை செய்யப்பட வேண்டியது, ஆய்வு செய்யப்பட வேண்டியது. எனவே, அது அரசினுடைய தீவிரமான பரிசீலனையில் இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை நவீனப்படுத்தும் திட்டம்

*வினா எண். 678 : திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல் படுத்தப்படும் ?

(இ) திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை 1978–79, 1979–80 ஆம் ஆண்டுகளில் ஈட்டிய லாபம் எவ்வளவு ?

1982 மார்ச் 31]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :(அ) ஆம்.

(ஆ) தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

(இ) அந்தந்த ஆண்டுகளில் ஈட்டிய லாபம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது:—

ஆண்டு.	(லாபம் அந்த ஆண்டிற்கானது) (ரூபாய் இலட்சத்தில்.)
1978	20·16
1979	28·20
1980	36·41

திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி : தலைவர் அவர்களே, இந்த நூற்பாலையில் உள்ள கருவிகள் எல்லாம் மிகவும் பழையவையாக இருக்கின்ற காரணத்தினால் அதைப் புதிதாக மாற்றி நவீனப்படுத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அங்கே உள்ள இயந்திரங்களை ரிப்பேர் பார்க்கவும், மாற்றி அமைத்து சில புதிய கட்டிடங்களைக் கட்டவும் போன்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரையில் சுமார் 30 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. இன்னமும் தேவைக்கேற்ப விரிவாக்கமும் மாறுதல்களும் நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலை விரிவாக்கம் செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி விரிவாக்கம் செய்யப்படும்போது அந்த மாவட்டத்திலே உள்ள அந்த தாலுகாவிலே உள்ள பின்தங்கிய பகுதிகளில் அந்த விரிவாக்கப் பணி அமல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் லாபங்களைப் பற்றித்தான் சொன்னேன். ஆனால் மொத்தத்தில் லாபமா, நஷ்டமா என்றால் மொத்தத்திலே 5 லட்சம் ரூபாய் நஷ்டம். சென்ற 3, 4 ஆண்டுகளாக லாபம் இருந்தாலும் கூட, மொத்தம் 5 லட்சம் ரூபாய் நஷ்டத்தில் இருக்கின்றது. இந்த ஆண்டு அந்த நட்டம் ஈடு செய்யப்பட்டு, லாபத்தில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்படி முழுமையாக லாபத்திலே வந்ததற்குப் பிறகு அந்தக் கதிர்களை, ஸ்பின்டில்களை அதிகரிப்பதா அல்லது இன்னொரு பின்தங்கிய பகுதியிலே ஒரு துணை தொழிற்சாலையை துவங்குவதா என்பது பற்றி முடிவு செய்யவேண்டும். அப்போது அது பற்றி அரசு யோசனை செய்யும்.